**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர், தேதி: 21.07.2023
ஆசிரியர்,
ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் வேலைவாய்ப்பு முகாம் - 2023**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் வேலைவாய்ப்பு முகாம் - 2023 ஜீலை 19 மற்றும் 20 தேதிகளில் மாணவர் நல மையத்தின் சார்பாக தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள அரங்கத்தில் நடைபெற்றது.

மாணவர் நல மையத்தின் முதன்மையர், முனைவர் நா.மரகதம், வரவேற்புரை ஆற்றினார். அவர் தனது உரையில், இவ்வேலைவாய்ப்பு முகாமிற்கு கலந்து கொண்ட நிறுவனங்களை வரவேற்று அவர்கள் பல்கலைக்கழகத்தின் மீது வைத்துள்ள நம்பிக்கையினை பாராட்டினார். தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகமானது வேளாண் அறிவியல் கல்வியில் முன்னோடியாக திகழ்வதோடு தேசிய அளவில் முதலிடத்தைப் பெற்றுள்ளதை சுட்டிக்காட்டினார். மாணவர்களின் கல்வி மற்றும் தொழில் தொடர்பான திறன்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக பாடத்திட்டமும் வடிவமைக்கப்பட்டுள்ளது என்பதை அவர் கோடிட்டுக் காட்டினா ர். இது தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக மாணவர்களை அரசு, தன்னார்வ தொண்டு நிறுவனம், சேவைத் துறை, வங்கி, தேசிய மற்றும் சர்வதேச நிறுவனங்கள் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களில் வேலைவாய்ப்பை பெறுவதற்கு பெரிதும் உதவுகிறது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் வெ.கீதாலட்சுமி துவக்க உரையாற்றி, வேலைவாய்ப்பு முகாம் 2023 -ஐ வெற்றிகரமாக நடத்துவதற்கு உதவி புரியும் நிறுவனங்களை பாராட்டி மேலும் பல்கலைக்கழகத்தின் வேலைவாய்ப்பு முகாமிற்கு கலந்து கொள்ள வந்திருக்கும் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் உறுப்பு கல்லூரி மாணவர்களையும் உற்சாகப்படுத்தியதோடு அவர்களின் அறிவு மற்றும் கற்ற திறன் மேம்பாடு அடிப்படையில் பொருத்தமான வேலையை பெற ஊக்குவித்தார். மாணவர்கள் தங்களுக்கு கிடைக்கக்கூடிய அரிய வாய்ப்புகளைப் பயன்படுத்தி முன்னேறுவதற்கு இப்பல்கலைக்கழகம் சிறந்த முன்னோடியாக திகழ்கிறது.

முனைவர் கே. செல்லமுத்து வேலைவாய்ப்பு ஆலோசகர் அவர்கள் 2023 ஆம் ஆண்டிற்கான இவ்வேலைவாய்ப்பு முகாமை நடத்துவதற்கான் முக்கியத்துவம் குறித்து விளக்கினார். மேலும் மாணவர்கள் தங்களின் விண்ணப்பம் தயாரிப்பது, பொது விவாதத்தில் பங்கேற்பது, தனிப்பட்ட நேர்காணலில் கலந்து கொள்வதற்கு ஏற்ப பயிற்சி வகுப்புகள் மாணவர் நலமையத்தின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டது. இம்முகாமில் மாணவர் நலமையத்தின் ஆசிரியர்கள் வேளாண் விரிவாக்க பேராசிரியர் முனைவர் ஜெ.வெங்கிட்பிரபு, தாவரநோயியல் பேராசிரியர் மு.முத்துலட்சுமி, ஆங்கில உதவிபேராசிரியர் திருமதி சு.பொ.சண்முகபிரியா மற்றும் தோட்டக்கலை உதவிபேராசிரியர் முனைவர் ஜி.அசோக் குமார் மற்றும் உறுப்புக் கல்லூரியை சார்ந்த வேலைவாய்ப்பு அலுவலர்கள் கலந்து கொண்டு இவ்வேலைவாய்ப்பு முகாமை சிறப்புற நடந்திட உதவி புரிந்தனர்.

இம்முகாமில் கலந்து கொண்ட நிறுவனங்கள் அந்நிறுவனத்தின் முக்கிய நோக்கம், வேலையின் தன்மை, ஊதியம் முதலியவற்றை படத்தொகுப்புகள் மூலம் விளக்கினர். முனைவர் ஜெ.வெங்கிட்பிரபு நன்றியுரை ஆற்றினார். இம்முகாமிற்கு இளங்கலை, முதுகலை பட்டதாரிகள் உட்பட சுமார் 700 மாணவர்கள் மற்றும் முப்பதுக்கும் மேற்பட்ட நிறுவனங்கள் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக வேலைவாய்ப்பு முகாமில் பங்கேற்று பயனடைந்தனர்.

**மக்கள் தொடர்பு அலுவலர்**